**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# CP. 23 /2022

**Deposition of PW1**

Name : **பெருமாயி** Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 23.02.2023in accordance with Provisions X of Evidence Act 1872.

**குறுக்கு விசாரணை**

**நான் என்ன படித்திருக்கிறேன். என்றால் SSLC படித்திருக்கிறேன். என் கணவர் பணியில் சேர்ந்த தேதி தெரியுமா என்றால் தேதி தெரியாது 1980 ல் பணியில் சேர்ந்தார். அவர் ஓய்வு பெற்ற தேதி என்வென்றால் 28.02.2015 ஆகும். என் கணவர் என்ன படித்திருந்தார் ITI முடித்திருந்தார். கடைசியாக என் கணவருக்கு எவ்வளவு பென்சன் தொகை என்றால் ரூ 14081 ஆகும். என் கணவர் இறந்த தேதி 11.11.2018 ஆகும் . வாரிசு சான்றிதழ் எப்பொழுது பெற்றேன் என்றால் 2019 ல் பெற்றேன். என் கணவர் இறந்துவிட்டதால் எனக்கு ஓய்வூதிய தொகை வேண்டுமென்று எதிர்மனுதாரர் நிறுனத்திடம் 25.02.2019 ல் கேட்டேன். நான் முதலில் 25.02.2019 ல் ஒய்வூதியம் கோரவில்லை 04.04.2019 ல் தான் ஓய்வூதியம் கோரி மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. எந்த துறையில் நான் வேலை செய்தேன் என்றால் பள்ளில் சத்துணவு அமைப்பாளராக இருந்தேன். என் கணவர் ஓய்வடைந்த பின்னரும் நான் அந்த பணியில் தொடர்ந்து**

இருந்தேன் என்றால் சரி. நான் ஓய்வு பெற்ற தேதி 31.03.2018 ஆகும். நான் தற்போது பெற்று வரும் குடும்ப ஓய்வூதிய தொகை எவ்வளவு என்றால் ரூ 9864 தொகை பெற்று வருகிறேன். நான் ரூ 9864 தொகையை குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறேன் என்பது தவறு. நான் ரூ 13981 தொகையை குடும்ப ஓய்வூதியமாக பெற்று வருகிறேன் என்றால் சரி. நான் தற்போழுதும் சத்துணவு அமைப்பாளராக பணியாற்றி வருவதற்கு சிறப்பு ஓய்வூதியமாக ரூ 2000 பெற்றுவருகிறேன் என்றால் சரி. நான் குடும்ப ஓய்வூதியம் கோரி முதலில் 04.04.2019 ஆம் தேதி மனு கொடுத்த போது நான் சிறப்பு ஓய்வூதியமாக ரூ 2000 பெற்று வருகின்ற விவரத்தையும் நான் பணியில் இருந்த விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நிர்வாகம் வாய்மொழியாக அகவிலைப்படி வழங்க முடியாது என்று சொன்னார்கள் என்பது தவறானது என்றால் சரியல்ல. எனக்கு சிறப்பு ஓய்வூதியம் மட்டும் தான் வருகிறது , குடும்ப ஓய்வூதியத்துடன் அகவிலைப்படியும் சேர்த்து வழங்குமாறு வாய்மொழியாக கோரிக்கை வைத்துள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மீண்டும் மனுவாக எப்பொழுது எழுதி கொடுத்தேன் என்றால் 05.08.2019 ல் மனு கொடுத்தேன். அதற்கு முன் நான் மனு கொடுக்கவில்லை 05.04.2021 ல் தான் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரூ 13981 ஓய்வூதிய தொகை எந்த மாதம், வருடத்திலிருந்து பெற்றுவருகிறேன் என்றால் ஜீலை 2021 முதல் பெற்ற வருகிறேன். 05.04.2021 ல் மனு கொடுத்த பின்னர் ஜீலை 2021 லிருந்து தற்போது வரை அகவிலைப்படியும் சேர்த்து எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரி. என்னுடன் மனுவில் அகவிலைப்படி 30 மாதத்திற்கு வழங்க வேண்டும் என்று தவறாக கணக்கிட்டு காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அதன் படி குடும்ப ஓய்வூதிய வித்தியாச தொகையை எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டதல்ல என்றால் சரி.

27.10.2021 ல் ஓய்வூதிய வித்தியாச தொகையை வாய்மொழியாக கேட்டது சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கோரிக்கை மனுவாக கொடுத்தேன். என்னுடைய காலதாமதத்தால் தான் எதிர்மனுதாரர் நிர்வாகம் வித்தியாச தொகையை வழங்கவில்லை , 05.04.2021 ல் கொடுத்த மனுவிற்கு பின்னிட்டு 2021 ஜீலை மாதத்திலிருந்து சரியான முறையில் குடும்ப ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படியுடன் சேர்த்து பெற்று வருகிறேன் என்றால் சரி. நான் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள குடும்ப ஓய்வூதிய வித்தியாச தொகையை எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

Sd/-S.Sumathy,
Presiding Officer,
Labour Court, Salem.